பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

ஆங்கில மருந்து வகைகள்,
ஆயுள் வேத மருந்து வகைகள்,
கோவில் அபிஷேகச் சாமான்கள்.
மற்றும்
நாட்கருமங்களுக்குரிய சாமான்கள்

தினசரி மாலை வைத்திய சேவை எல்லாவற்றிற்கும்

சித்திமெடிக்கல் சென்ரர்
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

# உதயன்

விலை ரூபா 3-50

கால் நடை வைத்திய நிலையம் (தனியார்)

கால்நடை வைத்திய ஆலோசனை,
செயற்கைமுறைச் சினைப்படுத்தல்,
கோழிகளுக்கு றனிக்கட்,
அம்மை தடுப்பூசி ஏற்றல்
ஆகிய சேவைகளுக்கு

சித்தி மெடிக்கல் சென்ரர்
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.

சுடர் 5: பிரமோதூத ஆடி 11 வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 04 (27-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 146

# தெற்கில் மீண்டும் ஜே.வி.பி. மும்முரம்

## மாத்தறையில் 15 கிராமவாசிகள் காட்டுக்குள் வைத்து சுட்டுகொலை!

கொழும்பு, ஜூலை 27

தென்பகுதியில் மீண்டும் ஜே. வி. பி. தீவிரவாதிகளின் கை ஓங்கத் தொடங்கியிருக்கிறது. அவர்களின் "கொலைப் படலம்" திரும்பவும் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையில் 15 கிராமவாசிகளைக் கடத்திச் சென்ற ஜே. வி. பி. தீவிரவாதிகள் அவர்களைக் காட்டுக்குள் வைத்து சுட்டுக் கொன்றிருக்கின்றனர்.

மாத்தறை மாவட்டம் சியாலம்பலுகமுவ என்ற கிராமத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

சுமார் ஐம்பது பேர் கொண்ட ஜே. வி. பி. தீவிரவாதிகள் கோஷ்டி ஒன்றே இந்தக் கிராமத்தினுள் ரி 56 ரக துப்பாக்கிகளுடன் புகுந்து கிராமக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் 13 பேரையும் வேறு இரண்டு பேரையும் கடத்திக் காட்டுக்கு கொண்டு சென்றது என்றும்–

கடத்தப்பட்ட அனைவரும் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டனர் என்றும் தெரிய வருகிறது.

ஜே. வி. பி. இயக்கத் தீவிரவாதிகள் பற்றி அரசுக்குத் தகவல் கொடுத்தார்கள் என்பதற்காக அவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் இலங்கை ஆயுதப்படையினர் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கும் இத் தருணத்தில் தென் இலங்கையில் ஜே. வி. பி. இயக்கம் மீண்டும் தனது ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பித்திருப்பது அரசின் நடவடிக்கைகளுக்கு மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஒ-எ)

## ஆசிரியர் சம்பளத்துக்கு 6 கோடி ரூபா கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடபகுதி ஆசிரியர்களின் ஜூன், ஜூலை மாத சம்பளக் கொடுப்பனவுகளுக்காக 6 கோடி ரூபா இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

யாழ். கல்விப் பணிப்பாளரின் கணக்கில் இந்தப் பணம் வரவு வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இலங்கை வங்கித் தலைமைப் பீடத்தில் இருந்து யாழ். கிளைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உரிய நிதி தற்போது வங்கிக்கு வரவு வைக்கப்பட்டிருப்பதால், ஆசிரியர்களின் ஜூன், ஜூலை மாதத்திற்குரிய சம்பளக் காசோலைகளை திருப்பி விடாமல் காசோலைக்குரிய பணத்தை வங்கிகள் வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆனையிறவு முகாமுக்கு மேலும் 1,000 துருப்புகள்

கொழும்பு, ஜூலை 27

ஆனையிறவு இராணுவ முகாமுக்கு மேலும் ஆயிரம் துருப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று செய்தியாளர் மாநாட்டில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம், வவுனியா ஆகிய பகுதிகள் ஆயுதப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன.

முல்லைத்தீவு இராணுவ முகாம் பிரதேசத்தைத்தான் ஆயுதப் படையினர் மீட்க வேண்டியுள்ளது – என்று திரு. ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார். (ஒ-எ)

## பொம்மர் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 27

நேற்று முற்பகல் 11 மணியளவில் திடீரென வந்த இரு பொம்மர்கள் கோட்டைப் பகுதியில் இரண்டு குண்டுகளை வீசிவிட்டு, சில நிமிடங்களில் சென்றுவிட்டன.

நேற்றிரவு சுமார் 7 மணியளவிலும் இரு பொம்மர்கள் கோட்டைப் பகுதிக்கு மேலாக சிறிது நேரம் பறந்தன; அவை தாக்குதல் எதனையும் மேற்கொள்ளவில்லை. (ஒ-10)

### சுபநேரம்

27- 7- 90
வெள்ளிக்கிழமை ஆடி 11
சுபநேரம்:
06-02— 07-32
இராகுகாலம்
10-32—12-02

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் பொலிஸாரை ஒப்படைத்திருக்கலாமே?

### அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 27

கடத்திச் செல்லப்பட்ட பொலிஸாரை விடுவித்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருப்பதை பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நிராகரித்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டது.

கடத்திச் செல்லப்பட்ட பொலிஸார்பற்றிய தகவல்களைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழு விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் கேட்டிருந்தது என்றும் —

அப்படிக் கடத்திச் செல்லப்பட்ட பொலிஸார் விடுவிக்கப்பட்டிருந்தால் அவர்களைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவிடம் விடுதலைப்புலிகள் ஒப்படைத்திருக்கவேண்டும் என்றும்–

ஆனால் அப்படி அவர்கள் ஒப்படைக்கப்படவில்லை என்றும் திரு. ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார் என்று அப்பத்திரிசைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-எ)

## விடுவிப்பு நிகழ்ச்சியில் பங்குபற்ற செஞ். பிரதிநிதிகள் மறுத்தனர்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

கடந்த 21 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொலிஸார் 17 பேரை விடுவிப்பது தொடர்பாக, விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

பொலிஸார் விடுவிக்கப்படும் நிகழ்ச்சியில் உடனிருக்கும்படி செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று அழைப்பும் விடுத்தனர்.

கடந்த 21 ஆம் திகதி மாலையில் குறிப்பிட்ட விடுவிப்பு நிகழ்ச்சி திட்டமிடப்பட்ட நேரத்துக்குப் பிந்தியே இடம் பெற்றது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளின் வருகைக்காகக் காத்திருப்பதாக அப்போது பத்திரிகையாளரிடம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால்—

இந்த நிகழ்ச்சியில் பங்குபற்ற செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மறுத்துவிட்டதாகவும்—

அதனால் அவர்களின்றியே பத்திரிகையாளர்கள் முன்னிலையில் பொலிஸாரை விடுவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி பொலிஸார் விடுவிக்கப்பட்டனர். (அ-உ)

## பொலிஸார் விடுவிப்பு நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்கு மறுத்தது ஏன்?

### செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

'முன்னேற்பாட்டின்படி இடம்பெறும் கைதிகள் ஒப்படைப்பு நிகழ்ச்சியில் மட்டுமே கைதிகளை நாம் பொறுப்பேற்க முடியும். கைதிகள் விடுவிப்பு நிகழ்ச்சியில் பார்வையாளராகப் பங்குபற்ற முடியாது;

''செஞ்சிலுவைச் சங்கச் செயற்பாடுகளுக்குரிய சர்வதேச ஏற்பாடுகளில் இத்தகைய நிகழ்ச்சிகளில் நாம் பங்குபற்றுவதற்கு இடம் ஏதும்இல்லை;

'இத்தகைய நிகழ்ச்சிகளில் நாம் பங்குபற்றுவது, ஒரு சாராரின் பிரசார நடவடிக்கைகளுக்கு நாங்கள் துணைபோவதாகமற்றைய சாராரை நினைக்கச் செய்யும்'.

– இவ்வாறு விளக்கம் தந்தார் யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழுப் பேச்சாளர் ஒருவர்.

பொலிஸார் விடுவிப்பு நிகழ்ச்சியில் பங்குபற்றுமாறு விடுதலைப்புலிகள் தங்களுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப இருதலைக் கொள்ளி எறும்பு போலை பிரேமாவின்ரை நிலை எண்டு சொல்லுங்கோ...!

## மின்விநியோகம் கிடைப்பது மேலும் தாமதமாகலாம்?

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடபகுதிக்கு நீர் மின்சாரம் கிடைப்பது மேலும் தாமதமாகும் எனத் தெரிய வருகிறது.

கிளிநொச்சியில் இடம்பெற்றுவரும் மோதல்களினால் அங்கு 132 கே. வி. மின் கம்பிகள் மேலும் சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு சமீபமாக இருந்த 132 கே. வி. மின் கம்பிகள் சேதமடைந்ததால் வடபகுதிக்கான மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது.

அப் பகுதியில் மோதல் நிலை தணிந்து – திருந்த வேலைகளுக்கு அனுமதி கிடைத்தால் – எட்டு மணி நேரத்தில் அந்தத் திருத்த வேலையை மேற்கொண்டு முடிக்க இலங்கை மின்சார சபை அதிகாரிகள் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால் தற்போது அப்பகுதியில் மோதல் கடுமையாக இடம்பெற்று வருவதால் மின் கம்பிகளும், மின் கோபுரங்களும் மேலும் சேதமடைந்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டமாவடி, ஏறாவூரில் ராணுவத்தை வழி மறித்து புலிகள் கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

நேற்று பூனானையிலிருந்து ஓட்டமாவடிக்குச் சென்ற இராணுவத்தினரை வழி மறித்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

இதேவேளை நேற்று முன்தினம் ஏறாவூரில் இருந்து கிரான் நோக்கிச் சென்ற இராணுவத்தினரை இடைமறித்தும் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். (ஒ-9)

## முல்லைத்தீவில் தங்கியிருந்த அகதிகள் காடுகள் வழியாக நடையில் யாழ். வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 27

பணவசதி இல்லாத நிலையில் ஆயிரக்கணக்கான அகதிகள் காடுகள் வழியாக முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நடையில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

முல்லைத்தீவுப் பகுதியில் அகதிமுகாம்களில் தங்கியிருந்த அவர்கள் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து இங்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வந்தவர்களில் அதிகமானவர்கள் மாற்றுடையின்றி அல்லலுறுவதாகத் தெரிய வந்தது. [ஒ-3]

## வி. பி. சிங் திரும்பினார்

நான்கு நாள் ரஷ்யப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியப் பிரதமர் வி.பி.சிங் நேற்று மாலை புதுடில்லி திரும்பினார். (அ-எ)

## பாப்பரசரின் பிரதிநிதி ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 27

பாப்பாண்டவரின் பிரதிநிதி கருதினால் ஜோன் போப் நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவைச் சந்தித்தார்

அவர் இலங்கையில் சமாதானமும் சுபீட்சமும் நிலவவேண்டும் என்ற பாப்பாண்டவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் ஊர்காவல் படையினரை பணியில் ஈடுபடுத்தக் கோரிக்கை

### முஸ்லிம் காங்கிரஸ் பிரேமாவிடம் விடுத்தது

கொழும்பு, ஜூலை 27

கிழக்கில் பாதுகாப்புப் படையினருடன் மேலதிகமாக ஊர்காவல் படையினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்த வேண்டும்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்திருக்கிறது.

நேற்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவை முஸ்லிம் காங்கிரஸின் தூதுக்குழு சந்தித்த போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின்போது முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் எம். எச். எம். அஷ்ரப், பொதுச் செயலாளர் எம். ஜே. ஏ. சஹீத், எம். எல். ஏ. ஹிஸ்புல்லா எம். பி., மற்றும் ஹஹீம் ஆகியோர் கலந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கொடியேற்றத்துடன் நல்லூர் உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

உற்சவத்தை அமைதியாக நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகம் செய்துள்ளது.

குடாநாட்டின் தற்போதைய நிலை கருதி உள் வீதியிலேயே முருகப் பெருமான் ஆரோகணித்து பக்தர்களுக்கு காட்சி தருவார்.

சூழ்நிலைக்கு ஏற்ப திருவிழா நேரங்களில் மாற்றம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் இருந்து கொடிச்சீலை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மயிலிட்டியில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

நேற்றுப் பிற்பகல் 2. 30 மணியளவில் மயிலிட்டிப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஹமீட் [சி. இராசலிங்கம்–அச்சுவேலி] என்பவர் வீரமரணம் அடைந்தார். (ஒ-9)

## ஐந்து தமிழர் அமைப்புகள் நேற்று ஜனாதிபதியுடன் பேச்சு

### அப்பாவி மக்களை காப்பாற்றக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 27

ஐந்து தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழு ஒன்று நேற்றுக் காலை ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அப்பாவித் தமிழ்பேசும் மக்களின் உயிர், உடைமைகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தூதுக்குழு ஜனாதிபதியைக்கேட்டுக்கொண்டது.

அப்பாவி மக்களைக் காப்பாற்ற பாதுகாப்புப் படையினர் தீவிர முயற்சி எடுப்பர் என்று ஜனாதிபதி பிரேமதாஸா தூதுக்குழுவினருக்கு உறுதியளித்தார்.

அனைத்துத் தமிழ்க்குழுக்களையும் அழைத்து பேச்சுக்கள் நடத்தி தீர்வுகாணவேண்டும் என்று தூதுக்குழுவினர் கேட்டுக்கொண்டனர்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, 20 பிரச்சினைகளை அடையாளங் கண்டு தீர்வு காண்பதில் சர்வகட்சிக் குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனியில் கொள்ளை லாபம்: வர்த்தகருக்கு அபராதம்

அச்சுவேலி, ஜூலை 27 அச்சுவேலியில் சீனியை கிலோ 68 ரூபாவாக விற்ற வர்த்தகர் ஒருவர் 6 ஆயிரம் ரூபா தண்டமாகச் செலுத்தினார்.

பொது மக்கள் தெரிவித்த தகவலை அடுத்து கோப்பாய் வட்ட அவை பொறுப்பாளர், அச்சுவேலி வடக்கு சிற்றூர் அவையினர் ஆகியோர் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து தண்டம் விதிக்கப்பட்டது. (இ-11)

ஸ்ரீ ராம ஜெயம்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வ. தருமரட்ணம்

தோற்றம்: 20 - 11 - 1920 மறைவு: 06 - 08 - 1989

திதி: 27 - 07 - 1990

ஆண்டு ஒன்று சென்றாலும் இன்னும் நீங்கவில்லை எம் துயர் அலைகள். ஆவி விடுத்துப் போன பின்பும் நாம் ஆயிரமாய் கலங்குகிறோம், உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்களை நினைவு கூரும்:
மனைவி, மக்கள்.

'விஷ்ணு பவனம்'
சண்டிலிப்பாய் றோட்,
பண்டத்தரிப்பு. (13806)

குருவே துணை

## 5 ஆம் ஆண்டு குருபூசை

28 - 07 - 90

### திரு முத்துக்குமாரு-மயில்வாகனம் சுவாமி

(ஆனந்தாச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டமானாறு)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரம ஸ்தாபகரான திரு. முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி அவர்களின் குருபூசை 28-07-90 (சனிக்கிழமை) அன்று அவர்களின் சமாதியுள்ள இடமான ஆனந்தாச்சிரமத்தில் நடைபெறும் என்பதை அன்பர்கள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் குருபூசையில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இங்ஙனம்
கோபாலு, திறியம்பகமூர்த்தியும்,
ஆச்சிரம சிடர்களும்,
ஆனந்தாச்சிரம நிர்வாகி.

(13834)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
செல்லப்பா சின்னத்தம்பி
(சுன்னாகம் மின் நிலைய ஊழியர்)

படைப்பு: 16 - 12 - 1934 ஆண்டவன் அழைப்பு: 20 - 07 - 1988

திதி: 27 - 07 - 1990

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய் விளங்கிய எம் குல தெய்வமே! ஆண்டுகள் இரண்டோடியும் உம் நினைவு எம்மைவிட்டு அழியவில்லை.

உங்கள் ஈடுசெய்ய முடியாத பிரிவால் வாடும்;
மனைவி, சகோதரர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்.

கடகப்புலம் ஒழுங்கை,
சுன்னாகம். (13828)

### அபிஷேகம் கூட்டுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜூலை 27 நீர்வேலி தெற்கு முருகையன் கோவிலில் நாட்டின் அமைதிக்காகவும், விடுதலைப் புலிகளின் வெற்றிக்காகவும் அபிஷேகமும், கூட்டுப்பிரார்த்தனையும் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். (இ-மு)

### நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 27 துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் இராஜகோபுர கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 44 நாட்கள் நடந்த மண்டலாபிஷேகத்தின் நிறைவு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (இ-மு)

### உரும்பராயில்

கொழும்புத்துறை, ஜூலை 27 உரும்பராய் அருள்மிகு பர்வதவர்த்தினி அம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும், 1008 சங்காபிஷேகமும், விசேஷ பூசைகளும் இன்று வெள்ளிக்கிழமை காலை எட்டு மணி அளவில் ஆரம்பமாக உள்ளது. (இ-30)

### மகோற்சவம்

கொழும்புத்துறை, ஜூலை27 சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்குநடைபெறும். (இ-30)

## குருநகரில் திருட்டு

குருநகர், ஜூலை 27 வீடு உடைக்கப்பட்டு ஆயிரம் ரூபா பணம், பெறுமதி வாய்ந்த உடுபுடைவைகள், மணிக்கூடு, ஸ்திரிகைப்பெட்டி என்பன திருடப்பட்டன.

திங்கள் இரவு குருநகர் மவுண் கார்மல் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ - 51)

அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

## அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

நாளை 28 - 07 - 90 அன்று ஆரம்பமாகவிருந்த மஹோற்சவம் தற்போதைய நாட்டின் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக நடைபெறமாட்டாதென்பதை அறியத் தருகிறோம்.

இங்ஙனம்
தேவஸ்தான ஆதீனகர்த்தர்கள்.

[13822]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சண்முகம் ஆனந்தமகேசன்

அன்னையின் மடியில்: 19 - 01 - 1952 அரனின் அடியில்: 27 - 06 - 1990


அன்னை தந்தைக்கு பாச மகனாய்
ஆசை மனைவிக்கு இனியவனாய்
உற்றாரின் ஊன்றுகோலாய்
நண்பர்களுக்கு நண்பனாய்
இறைப்பற்றில் வாழ்ந்த உம்மை
ஈசன் அழைத்ததேனோ

27 - 07 - 90 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
தாய், மனைவி, சகோதரர்கள்,
உறவினர்கள்.

20, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (13825)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



லெப்ரினன்ட் "ராசு"
[சிவஞானசுந்தரம் ஐங்கரன்]

தாயகத் தாய் மடியில்: 29 - 05 - 1968 தமிழீழத்தாய் விடிவில்: 27 - 07 - 1988

அன்பின் பிறப்பிடமே ஐங்கரனே!
ஆருயிரைத் துச்சமென மதித்த மறவேங்கை நீ
இதயத்தில் ஏற்றமிகு கொள்கை கொண்டு
ஈழ மண்ணின் விடிவிற்காய் வாழ்ந்தாய் என்றும்
உத்தமனே உன்போன்றோர் தியாகத்தாலே
ஊற்றெடுத்தோடும் தமிழீழ பேராறு அன்றோ
எம் தமிழீழ மண்ணின் சுதந்திர தீபத்தை
ஏமாற்று வித்தை கற்ற எத்தர்கள் அணைக்க
ஒரு பொழுதும் இடமளியோம் என்று
ஒய்வின்றி உழைத்து உயிர் துறந்த
ஔவியமகன்ற திவ்விய மணியே உன்புகழ்
என்றென்றும் வாழி

தந்தை, தாய்,
சகோதரர்கள், நண்பர்கள்.

''ஞானகிரி''
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (13821)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



திரு. கந்தப்பிள்ளை - பரராஜசிங்கம்
(இளைப்பாறிய பிரதம புகையிரத பாதுகாப்பு அதிகாரி)

தோற்றம்: 27. 1. 1930 மறைவு: 31. 1. 1990


திதி: 27. 7. 1990


பாசம் மறக்கவில்லை பட்சமுள்ள பத்தாவே! அப்பா!! அன்புடனும், பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்து, எம்மைப் பக்குவமாக வளர்த்ததோடு மட்டுமன்றி, நாங்கள் வழமுடனே வாழ வழியும் காட்டினீர்கள். தாங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆறுமாதம் அல்ல. ஆறுவருடமல்ல. ஆறுயுகங்கள் கழிந்தாலும் உங்கள் அன்பு வதனமும், இன்பப்பேச்சும், பூரித்த புன்னகையும், பொலிவான கட்டழகும் எங்கள் கண்முன்னே எந்நேரமும் காட்சி அழிக்கும் அப்பா! நீங்கள் தான் எங்களை விட்டுப் பிரிந்ததுமல்லாமல் உங்கள் நேசமுள்ள மாமாவையுமா ஐந்து மாதத்திற்குள் கூட்டிச் சென்றீர்கள். இனியார் எங்களுக்கு உதவி. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
அன்பு மனைவி, அருமைப்பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். C/5286

## 31 ஆம் நாள் நினைவாஞ்சலி





செல்வன்
செல்வராஜா ஸ்ரீ முகுந்தன்

செல்வன்
சாந்திரட்ணம் விஜயபிரகாஷ்

(யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்கள்)

தோற்றம்: 1968 - 04 - 18 மறைவு: 1990 - 06 - 27

தோற்றம்: 1968 - 10 - 11 மறைவு: 1990 - 06 - 28

காட்சி மேடைகளில் - நாம்
காவிய நாயகர்கள்
காரியம் முடிந்து விட்டால்
காவிரியின் புதல்வர்கள்
தென்றலாய் வீசியது - எம்
தோழமைச் சக்கரம்
வாழ்க்கைப் பூங்காவில் - நாம்
வாழ்ந்து வந்தோம் ஒருகிளை மலராய்
தேன் குடிக்க வந்த வண்டும் - நம்
தோழமை கண்டு வியந்ததுண்டு
பாழும் விதியாலே எமை விட்டு
பாதியிலே சென்றீரே?
நாளையும் ......... நாளையும்
மனித நாடக மேடையிலே
பயணங்கள் என்றும் மரிப்பதில்லை எமது
இன்பங்கள் என்றும் அழிவதில்லை.

என்றும் தோழமை கொண்டு நிற்கும்,
உம் நண்பர்கள்.

யாழ்ப்பாணம். (13832)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### செயலகங்களைச் சேதமாக்குவது ஏன்

கிளிநொச்சியில் நடந்த இராணுவ நடவடிக்கையால், அந்த மாவட்டச் செயலகம் முற்றாகச் சேதமடைந்து விட்டது. இதே போல மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டச் செயலகங்களும் இராணுவத் தாக்குதல்களால் சேதமுற்றுள்ளன. யாழ்ப்பாணத்திலும் அரசாங்கச் செயலகத்துக்கு அருகே போடப்பட்ட குண்டினால் அரச அதிபரின் அலுவலகப்பகுதிசேதமடைந்துள்ளது.

முன்னர் ஒருபோதும் இல்லாத விதத்தில், இம்முறை அரசாங்கம் யுத்தத்தைப் பிரகடனப்படுத்திப் போர் நடத்துகிறது. நாட்டுக்கு நாடு நடக்கும் போர்களைப் போல, அல்லது வேறு நாடுகளில் நடக்கும் போர்களைப் போல குடிமக்கள் வாழாத எல்லைப்புறங்களிலோ அல்லது காட்டுப் பிரதேசங்களிலோ அல்லது மலைப் பிரதேசங்களிலோ இந்தப் போர் நடக்கவில்லை.

மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில், பொதுமக்களுக்கு சேவை புரியும் அலுவலகங்கள், நிறுவனங்கள், உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிற்சாலைகள், விளை நிலங்களான வயற்பரப்புகள் உள்ள பிரதேசத்திலேயே போர் நடக்கிறது.

மக்களையும், மக்கள் சேவை நிறுவனங்களையும் பாதிக்காமல் போர் நடத்துவது இயலாத காரியம் என்பது அரசுக்குத்தெரியாமல் இருக்க நியாயமில்லை. மக்களும் அரச, உடைமைகளும் அழிவுறும் என்பது தெரிந்து கொண்டும் போரை நடத்தும் அரசாங்கம் மக்களும், அவர்களது சேவை நிறுவனங்களும் பாதிக்கப்படாமல் இருப்பதில் சிறிதேனும் அக்கறை காட்டுகிறதா என்றால், அதுவுமில்லை.

இயன்றவரை மக்களைப் பாதிக்காமல் போரை நடத்துமாறு படைகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அரசு சொல்கிறது. ஆனால் நடப்பதோ நூற்றுக்கு நூறு எதிர்மாறானது.

பாதுகாப்பு அமைச்சின் புள்ளி விவரப்படி போரில் இறந்த ஆயுதப் படையினரின் எண்ணிக்கை 450 பேர். ஆனால் எமது மக்களோ இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தனை பொதுமக்களின் உயிரிழப்பும் தவிர்க்கமுடியாதவை என்று வெகு இலகுவாக, சுலபமாக இராணுவ அதிகாரிகளும், அமைச்சர் ரஞ்சனும் அடிக்கடி சொல்லிச் சமாளித்துக் கொள்கிறார்கள்!!

மக்கள் சேவை நிலையங்களான செயலகம் மற்றும் நிர்வாக அலுவலகங்களைப் பற்றிப் படையினருக்கு எவ்வித அறிவுறுத்தலும் இல்லை. ஏன் யுத்த காலத்தில் தாக்குதல் தவிர்க்கப்பட வேண்டிய ஆஸ்பத்திரிகளைப் பற்றிக் கூட, அவற்றைத் தாக்காமல் இருக்குமாறு ஆயுதப் படையினருக்கு அறிவுறுத்தப்படவில்லை. வடக்கின் ஐந்து மாவட்டச் செயலகங்களும், பல ஆஸ்பத்திரிகளும் இராணுவத் தாக்குதல்களால் சேதமடைந்தது அதன் விளைவேயாகும்.

வடக்கில் அரசாங்க நிர்வாக இயந்திரத்தை முடங்கச் செய்வதற்கான ஒரு சதியாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. ஆயுதப் படையினர் மட்டுமன்றி அரசாங்கமும் இதற்கு உடந்தையாக இருக்கிறது. பெயருக்காவது செயலகங்கள், ஆஸ்பத்திரிகளைத் தாக்க வேண்டாம் என்ற உத்தரவு தானும் படையினருக்கு விடுக்கப்பட்டதாக ஒரு சந்தர்ப்பத்திலும் கூறப்படவில்லை எனவே வடக்கில் செயலகங்களைச் செயலிழக்கச் செய்து இராணுவ ஆட்சியைக் கொண்டு வருவதற்கு இது ஆரம்ப ஏற்பாடாக இருக்குமோ என சந்தேகப்பட வேண்டி உள்ளது.

## புத்தூரில் இறுதி அஞ்சலி

அச்சுவேலி, ஜூலை 27

கடந்த திங்கட்கிழமை காங்கேசன்துறையில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் பிரசன்னாவின் பூதவுடலுக்கு [புதியாக்குட்டி - தயாபரன் மணற்பகுதி புத்தூர்] ஆயிரக் கணக்கான மக்கள் புத்தூரில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பிரசன்னாவுக்கு அஞ்சலி தெரிவித்து புத்தூர், அச்சுவேலிப் பகுதியில் செவ்வாய்க்கிழமை துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. பிரசன்னாவின் பூதவுடல் செவ்வாய் மாலை மணற்பகுதி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (இ-11)

## மண்டைதீவில்

மண்டைதீவு, ஜூலை 27

மண்டைதீவு தனியார் மினிபஸ் சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஏற்பட்டுள்ள டீசல் தட்டுப்பாடே இதற்குரிய காரணமாகும். மண்டைதீவு மக்கள் அராலித் துறைவரை கால்நடையாகவும் சைக்கிள் மூலமும் தங்கள் பிரயாணங்களை மேற்கொண்டு வருகிறார்கள். (88)

## ரஞ்சன்-ஹேமா இன்று வவுனியாவில்

கொழும்பு, ஜூலை 27

பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இன்று வெள்ளிக்கிழமை வவுனியாவுக்குச் செல்கின்றார்.

வவுனியா மாவட்ட பாதுகாப்பு நிலைமைகள் குறித்து அப்போது அவர் அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் ஆராய்வார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. திரு. ரஞ்சன் விஜேரத்தினாவுடன் ஜனாதிபதி பிரேமதாஸாவின் துணைவியார் திருமதி ஹேமா பிரேமதாஸா, வவுனியா மாவட்ட எம். பியும் கல்வித் துணை அமைச்சருமான திருமதி ராஜமனோகரி புலேந்திரன் ஆகியோரும் வவுனியா செல்கின்றனர். (இ-எ)

# நயினாதீவு கடற்படையினரின் ரோந்து அதிகரிப்பு

## புதிதாக 3 விசைப் படகுகள்

புங்குடுதீவு, ஜூலை 27

நயினாதீவு கடற்படையினர் புதிதாக மூன்று விசைப் படகுகளை சேவையில் ஈடுபடுத்தி வருகின்றனர். இந்த விசைப்படகுகள் தற்போது நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு பகுதிக் கடற்பிராந்தியங்களில் ரோந்து சேவையில் ஈடுபட்டுள்ளன.

இந்த விசைப்படகுகள் அதிசக்தி வாய்ந்த வெளிச்சத்தை கரையோரப்பகுதிகளை நோக்கிப் பாய்ச்சி கரையோரங்களைக் கண்காணித்து வருகின்றன.

கடற்படையினரின் இந்த நடவடிக்கையால் புங்குடுதீவின் தெற்கு கரையோரங்களில் வாழும் மக்கள் இரவு நேரங்களில் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்கின்றனர்.

புங்குடுதீவு தெற்கு கடற்கரைப் பகுதி மீனவர்கள் இரவு நேரங்களில் தொழிலுக்குச் செல்ல அஞ்சுகின்றனர். (இ-131)

## புங்குடுதீவுக்கு 2பொதிகள்

புங்குடுதீவு, ஜூலை 27

செஞ்சிலுவைச் சங்க வாகன அணிமூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்ட 70தபால் பொதிகளில் இரண்டு புங்குடுதீவுப் பகுதிக்கு எடுத்து வரப்பட்டன.

இந்த 2 பொதிகளுடன் யாழ். குடாநாட்டில் சேர்க்கப்பட்ட புங்குடுதீவுக்கான தபால்கள் அடங்கிய மற்றும் இரு பொதிகளும், புங்குடுதீவுக்கு எடுத்து வரப்பட்டு செவ்வாய், புதன்கிழமைகளில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (இ-131)

## முதலுதவிப் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

இன்றைய தேவையைக் கருத்தில் கொண்டு அளவெட்டிப்பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் அப்பகுதிப் பொதுமக்களின் ஆதரவுடன் முதலுதவிப் பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்தினர்.

சென்ற 20 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரை நடைபெற்ற இவ்வகுப்புக்களில் சுமார் 200 பேர் பங்குபற்றினர்.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த மருத்துவபீட மாணவர்கள் ''போர்க்கால வைத்திய நிலையம்'' ஒன்றை ஆரம்பித்து பிரதேச மக்களின் உதவியுடன் நடத்தி வருகின்றனர். (இ - மு)

## இதுவரை 50க்கு மேற்பட்ட போர்க்காலக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

போர் ஆரம்பித்த நாள் முதல் இதுவரை 50க்கு மேற்பட்ட போர்க்கால அவசரக் கூட்டங்கள் வடமராட்சியில் நடத்தப்பட்டுவிட்டன.

இளைஞர்களும், யுவதிகளும் மட்டுமன்றி வயோதிபர்களும் இந்தக்கூட்டங்களில் பெருமளவு கலந்து கொண்டு வருகின்றார்கள்.

வடமராட்சியின் கடற்கரைப்பிரதேசங்களில் காவலில் ஈடுபடும் பணியில் புலிகளுக்குத் துணையாக குடும்பஸ்தர்களும் தாமாக முன்வந்து ஈடுபட்டுவருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மருண்டவரின் ஓலம் ஊரை குழப்பியது

குருநகர், ஜூலை 27

வள்ளம்கவிழ்ந்ததால் உயிர் தப்புவதற்கு கரையை நோக்கி வந்தவர்களைப் பார்த்த ஒருவர் ''ஆமி வருகிறது ஆமி வருகிறது'' என்று எழுப்பிய ஓலம் கிழக்கு அரியாலை பகுதி மக்களைகிலி கொண்டு ஓட வைத்தது.

இச்சம்பவம் கடந்த 24 ஆம் திகதி இரவு நடைபெற்றது.

அன்றைய தினம் அரியாலைக் கடலில் வள்ளம் கவிழ்ந்ததால் சிறுவன் ஒருவன் பலியான செய்தி நேற்றைய உதயனில் வெளிவந்தது தெரிந்ததே ஏனையோர் உயிர் தப்பிக் கரையை அடைந்தனர். (இ-மு-51)

## உண்ணாவிரதக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

தமிழனின் விடிவுக்காகவும், தற்போதைய நிலையிலிருந்து தமிழ் மக்களை மீட்கவும் தெய்வ அனுக்கிரகம் வேண்டி பரந்தஅளவில் பல இடங்களில், பலர் பங்குபற்றக் கூடிய அளவில் உண்ணா நோன்பு நடத்தப்பட வேண்டும்.

திருநெல்வேலி கேணியடி மத்திய சன சமூகநிலையம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

## நல்லூர் உற்சவத்தை ஒட்டி வீதிப் போக்குவரத்துத் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 27

இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை ஒட்டி இன்று காலை முதல் அப்பகுதியில் போக்குவரத்துத் தடை அமுல் செய்யப்படுகிறது,

தடை செய்யப்பட்ட பாதைகளின் விவரம் வருமாறு:-

★ அரசடிச் சந்திக்கும் 2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதி.

★ பிராமணக் கட்டுக்குளச் சந்தியில் இருந்து சங்கிலியன் வீதிச்சந்திக்குள் இடைப்பம் கோவில் வீதி.

★ செட்டித்தெரு ஒழுங்கையில் இருந்து செட்டித் தெருப் பக்கம். (இ-3)

## வவுனியா அரச ஊழியர்கள் வேலைக்கு திரும்பமாட்டார்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

தங்குமிடவசதி, போக்குவரத்து, பாதுகாப்பு ஆகியன உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே வேலைக்குத் திரும்புவது என்று வவுனியா மாவட்ட அரசாங்க ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களில் கடமை புரியும் சகல ஊழியர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை வேலைக்குத் திரும்புமாறு அரசு அறிவித்துள்ளது.

ஆனால் தாங்கள் வேலைக்குத் திரும்ப முடியாது என்று தெரிவித்து அதற்கான காரணத்தை மகஜர் வடிவில் யாழ். அரச அதிபர் மூலம் கொழும்புக்கு அறிவிக்க அரச ஊழியர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

வவுனியாவில்இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள சகல அரச ஊழியர்களையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் கூடுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3-10)

## பாய்- உடுபுடைவைகளை சேகரித்து தரக் கோரிக்கை

ஒட்டுசுட்டான், ஜூலை 27

யாழ். மாவட்டத்திலுள்ள பொது நிறுவனங்கள் உடுபுடைவை மற்றும் பாய்களைச் சேகரித்து முல்லைத்தீவுச் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வே. கந்தசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவுக்கு மேற்குறிப்பிட்ட பொருள்களை அனுப்ப முடியாதவர்கள், நெல்லியடியில் இப்போது தங்கி நிற்கும் [illegible] தொடர்பு கொள்[illegible] அவர் உதயனுக்குத் [illegible] தார். [இ-113]

## கூட்டுறவுக் கடையில் பாண்

கொக்குவில், ஜூலை 27

தனியார் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்த பாண், தற்போது கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் பங்கிட்டு அட்டையுள்ளவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (இ-69)

## உப்பு விளைச்சல்

அச்சுவேலி, ஜூலை 27

தொண்டமானாறு குடாக் கடல் நீரேரியில் உள்ள வல்லைவெளியில் பரவைக் கடலில் பெருமளவில் உப்பு விளைந்துள்ளது. பொதுமக்கள் பெருமளவில் சென்று உப்பை அள்ளிச் செல்கின்றனர். (இ-11)

## வடபகுதி பொலிஸாரின் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடபகுதிப் பொலிஸாருக்கான ஜூலை மாதச் சம்பளமோ அல்லது சம்பள முற்பணமோ இதுவரை வழங்கப்படவில்லை.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமான பணம், யாழ். செயலகத்தில் இருந்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் பெறப்படாததே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதே வேளை பொலிஸாருக்கான ஜூன் மாத சம்பளமும் இன்னமும் வழங்கப்படவில்லை.

சம்பள முற்பணமாக ஆயிரம் ரூபா மட்டுமே இவர்களுக்கு வழங்கப்பட்டது. (இ-9)

## முல்லைத்தீவு கமநல சேவை ஊழியர்

யாழ்ப்பாணம், ஜூலை 27

முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைத் திணைக்கள ஊழியர்களின் ஜூன், ஜூலை மாதச் சம்பளம் வழங்குவது சம்பந்தமாகவும் மற்றும் திணைக்களத்தின் அவசரமான வேலைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உதவி ஆணையாளர் செ. பஞ்சலிங்கத்தின் உரும்பராய் இல்லத்தில் நடைபெறும்.

இடம் பெயர்ந்த அனைத்து ஊழியர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (இ - 5)

## இன்னும் இல்லை

கொழும்புத்துறை, ஜூலை 27

யாழ். மாவட்டத்தில் அடையாளக் கார்ட் பெறுவதற்கு 6 மாதத்துக்கு முன் விண்ணப்பித்தவர்களுக்கும் இன்னும் அது அனுப்பப்படவில்லை என்று கூறப்படுகிறது. (இ-30)

## சம்மாந்துறையில் பொலிஸ் நிலையம்

கொழும்பு, ஜூலை 27

சம்மாந்துறையில் மீண்டும் பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு உதவியாக விசேட அதிரடிப்படையினர் அங்கு பணிபுரிகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ - எ)

## உலர் உணவு

பச்சிலைப்பள்ளி, ஜூலை 27

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள நானூறு குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாக உதவி அரசாங்க அதிபர் திரு. சு. கந்தசாமி தெரிவித்தார். (இ-117)

## வயாவிளான் தபாலகம்

அச்சுவேலி, ஜூலை 27

வயாவிளான் [illegible] அச்சுவேலியில் இயங்கி வருகிறது. (இ-11)

## சாம் தம்பிமுத்து எம். பியின் இடத்துக்கு ஜோசப் தெரிவு

அகால மரணமடைந்த மட்டக்களப்பு மாவட்ட எம். பி. சாம் தம்பிமுத்துவின் இடத்திற்கு திரு. பி. ஜோசப் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 12 ம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் இது சம்பந்தமான அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா வெளியிட்டார்.

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் திரு. சாம் தம்பிமுத்துவுக்கு அடுத்து அதிகப்படியான வாக்குகளை திரு. பரராஜசிங்கம் ஜோசப் பெற்றிருந்தார். (ஒ-எ)

## ஜே.வி.பியுடன் தொடர்பு என்ற சந்தேகத்தில் தோட்ட உதவித் துரை பதுளை பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜூலை 27

ஜே. வி. பி. இயக்கத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் தோட்ட உதவி சுப்ரின்டன்ட் (உதவித் துரை) ஒருவரை பதுளைப் பொலிஸார் அண்மையில் கைது செய்தனர்.

பதுளை குதிரைப் பந்தயத் திடலில் ரகர் விளையாட்டுப் பயிற்சியில் இவர் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம், பொலிஸார் முகமூடி அணிந்த ஒருநபரை அங்கு கொண்டு சென்றனர்.

அந்த நபர் அடையாளங் காட்டியதைத் தொடர்ந்தே இவர் கைதானார்.

அதே தினத்தில் பதுளை நகரில் உள்ள இரண்டு வர்த்தகர்களும் முகமூடி நபர் தலையாட்டியதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டனர். (ஒ-எ)

## இருதய சத்திர சிகிச்சை இலங்கையில் செய்ய வசதி

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இலங்கையிலேயே இருதய சத்திர சிகிச்சை செய்யக் கூடிய வசதிகள் கிடைக்க உள்ளன.

இந்த வசதிகள் கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் செய்து கொடுக்கப்படவுள்ளன.

தற்போது இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ள இந்தியாவுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

அங்கு இதற்காக 3 லட்சம் ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது.

இலங்கையில் இச்சத்திர சிகிச்சையை செய்துகொள்ள ஒன்றரை லட்சம் ரூபாதான் செலவு செய்ய வேண்டியிருக்கும் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## மன்னாரில் பாலம் தகர்க்கப்பட்டதால் உணவு அனுப்பச் சிரமமாம்!

கொழும்பு, ஜூலை 27

மன்னார்தீவை பெருநிலப் பரப்புடன் இணைக்கும் ரயில் பாலம் தகர்க்கப்பட்டுள்ளதால், அப்பகுதிக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா மேற்கண்ட தகவலை நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்த மூன்று தினங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் 300 முஸ்லிம்கள் மன்னார் வந்து சேர்ந்துள்ளனர் -என்றும் அமைச்சர் சொன்னார். (ஒ-எ)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

நல்லூர் மாமுருகா!

நல்லூரில் வீற்றிருந்து நல்லாட்சி செய்து, மக்கள் வல்லூழ்வினைபோக்கும் மாமுருகா! - ஷெல் பொம்மர் செய்து வரும் நட்டணையால் சேர்ந்து நாம் துஞ்சுகின்றோம்

உய்யவருள் செய்வாய் உவந்து!

கவியரசு, வெண்பாமணி:
முருககூரியன்.

## தாயக மீட்புக்காக தம் உயிரை அர்ப்பணிக்கும் வீர வேங்கைகள்

### விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி அறிக்கை

இனவாத அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டி எமது தாயக பூமியை சுதந்திரநாடாக மலர வைக்க நாளாந்தம் நடக்கும் போரில் வீரமரணத்தைத் தழுவிக் கொள்கின்ற வீரவேங்கைகளுக்கு எங்கள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொக்காவில் இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி வெளியீட்டுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் இனப் படுகொலைகள், ஆக்கிரமிப்பு முயற்சிகள் அனைத்துக்கும் கொடுக்கப்பட்ட மற்றுமோர் பலத்த அடியாக அமைந்தது. கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதல். இத்தாக்குதலில் ஆண், பெண் போராளிகள் சமபங்கை வகித்தனர்.

சமூக அழுத்தத்தையும், பொருளாதார அழுத்தத்தையும் கொடுத்து எம் இனத்தை திக்கு முக்காடி திணறவைப்பதன் மூலம் எமது உரமான உறுதியான தேசியவிடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் எனப் பேரினவாத அரசு கனவு கண்டு கொண்டிருக்கிறது. கொக்காவில் தாக்குதல் இதற்குப் பலத்த அடி ஆகும்.

பறிக்கப்பட்ட எமது உரிமைகள் மீட்டெடுக்கப்பட்டு, சுதந்திர பூமியாக எமது தாயகம் உருவாக்கப்பட்டு, எமது இனத்தின் மானம், கௌரவம் காப்பாற்றப்பட்டே ஆகும் என்ற தமது கனவு நனவாகும் முன்பே வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட பெண்போராளிகள்;

கப்டன் உசா (இ. வனிதாம்பிகை - முள்ளியவளை), 2ஆம்லெப். மாலா (அ. ஸ்ரீமதி- வல்வெட்டித்துறை), 2 ஆம் லெப். சாலினி (அ. நவநீலவதனா- வல்வெட்டித்துறை), 2ஆம் லெப். பிரியங்கா (வி. குமுதினி - வல்வெட்டித்துறை), 2 ஆம் லெப். குமாரி (க. ரட்னம்பாள் - திரியாய்), 2 ஆம் லெப். அஜந்தா (த. சுசீலா- கல்வியங்காடு), கப்டன் சுகுமார் (திருகோணமலை), கப்டன் பாபு (மன்னார்), லெப். மாலி (துணுக்காய்), லெப். நியூட்டன் (கிளிநொச்சி), 2 ஆம் லெப். ஹமத் (தென்னமரவாடி), 2ஆம் லெப். நிலான் (வட்டக்கச்சி), 2 ஆம் லெப். ஜெயா (வவுனியா), கோபி (அம்பாறை), நவம் (திருகோணமலை), நிருபன் (உமையாள்புரம்), வினோத் (தென்னமரவாடி), மருது (புதுக்குடியிருப்பு) ஆகியோருக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"ஜீவாகாரம்"
தற்போதைய சூழ்நிலைக்கேற்ப
'ஜீவாகாரம்'
பாலுடனோ அல்லது வாழைப்பழத்துடனோ பிசைந்து உண்ணக்கூடிய சத்துணவு.
அண்ணா தொழிலகம்,
இணுவில்.



# உதயன்

27 - 7 - 1990 வெள்ளிக்கிழமை



பனம் பொருள்கள்:
★ புழுக்கொடியல் மா
★ ஒடியல் மா
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
அண்ணா கோப்பிக்கடை
திருநெல்வேலி.


## கிளிநொச்சியில் வீடுகள் கடைகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன!

யாழ்ப்பாணம், ஜூலை 27
கிளிநொச்சியில் வீடுகள், கடைகள், பெற்றோல் நிலையங்கள் என்பன எரித்தும் இடித்தும் நாசமாக்கப்பட்டு விட்டன.

பரந்தனில் இருந்து கிளிநொச்சி டிப்போ வீதி வரையான பகுதிகளில் வாழ்ந்த மக்கள் ஒன்பதாம் வாய்க்காலுக்கு அப்பால் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு கிளிநொச்சியில் இருந்து நேற்றுத் திரும்பிய ஆலை உரிமையாளர் ஒருவர் அங்குள்ள நிலைமையை உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமைவரை பரந்தன் கிளிநொச்சிப் பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புக்களை அவர் பின்வருமாறு விவரித்தார்.

கடந்த நான்கு நாட்களாக கிளிநொச்சிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதல்களில் தமிழரின் சொத்துக்கள் பெரிதும் நாசமாக்கப்பட்டன.

கிளிநொச்சி நகரம் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

செவ்வாய்க்கிழமை காலை பூங்காவனச் சந்திக்கு அருகில் உள்ள மயானத்தில் ஹெலியில் இருந்து படையினர் இறக்கப்பட்டனர். குறிஞ்சாத்தீவில் முன்பு இறக்கப்பட்ட படையினரும் செவ்வாய்க்கிழமை காலை பூங்காவனச் சந்தியைஅடைந்தனர். இருபகுதியினரும் இணைந்து தாக்குதல் நடத்தினர்.

ஒன்பதாம் வாய்க்காலடியில் விடுதலைப் புலிகளுக்கும் அவர்களுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றது.

பரந்தன் சந்தியில் முகாம் அமைத்த படையினர் செவ்வாய் இரவு கிளிநொச்சி முகாமை அடைந்தனர்.

பூங்காவனச் சந்தியில் இருந்து கிளிநொச்சி முகாம் வரையுள்ள மூன்று மைல் தூரம் உள்ள பாதைகளில் அன்று சென்ற வேளை அவர்கள் வீடுகளையும், கடைகளையும் தீயிட்டுக் கொழுத்தினர்.

பரந்தன் சந்தியில் உள்ள கடைகளையும், சுரடிப்போச்குச் சந்தியில் உள்ள வி.ஆர்.டி. பெற்றோல் நிலையம், ப.நோ.கூ. சங்க பெற்றோல் நிலையம், ஏ கே. ஆர். கட்டடம் ஆகியன தரைமட்டமாக்கப்பட்டன.

கிளிநொச்சியில் நீதிமன்றத்துக்கு முன்பாகவும், பக்கமாகவும் உள்ள கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டன.

புதன்கிழமை ஹெலி அப்பகுதிகளில் வட்டமிட்டுச் சென்றது. உருத்திரபுரம் பகுதியில் அது வேட்டுக்களைத் தீர்த்தது — என்றார். (அ-3)

## 3 வெவ்வேறு சம்பவங்களில் 42 சிங்களவர் கொலை

கொழும்பு, ஜூலை 27
மூன்று தனித்தனிச் சம்பவங்களில் 42 சிங்களவர்கள் இனந்தெரியாதோரினால் கொல்லப்பட்டனர் என்று துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார்.

மதவாச்சிப் பகுதியில்உள்ள கிராமம் ஒன்றில் 20 சிங்களவர் கொல்லப்பட்டனர். அவர்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

யான்ஓயாவில் 12 சிங்களவர்கள் கொல்லப்பட்டனர். மாதுறுஓயாவில் 10 சிங்களவர்கள் கொல்லப்பட்டனர் என்று ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார். (ஒ-எ)

## ஈரோஸ் எம்.பிக்கள் ராஜினாமா குறித்து ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 27
விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வேண்டுகோளின் பேரில்தான் எம்.பி. பதவிகளை ராஜினாமாச் செய்ததாக ஈரோஸ் உறுப்பினர்கள் தம்மிடம் தெரிவித்ததாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திருவாளர்கள் நடராஜா, பாலகுமார் ஆகியோர் தம்மைச் சந்தித்து இது பற்றித் தெரிவித்ததாகவும்—

எம் பி. பதவிகள் காலியாக இருக்கும் என்றும் மீண்டும் வருவோம்'' என்றும் அவர்கள் தெரிவித்ததாகவும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறினர் என்றும்— அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. [அ-எ]

## கொழும்பில் இருந்து 100 பேர் யாழ்ப்பாணம் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யுத்தம் மூழுவதற்கு முன்னர் கொழும்புக்குப் போய் திரும்பி வரமுடியாமல் அங்கு நிர்க்கதியான நிலையில் இருந்த சுமார் 100 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கொழும்பில் இருந்து ரயில் மூலம் மதவாச்சிவரை வந்து அங்கிருந்து இராணுவத்தினரின் உதவியுடன் பஸ்ஸில் றம்பைக்குளம் தேவாலயத்தை அடைந்து, அங்கிருந்துலொறிகள், பஸ்கள் மூலமாக நேற்றுக் காலை இவர்கள் யாழ்ப்பாணம் சேர்ந்தனர். (ஒ-3)

## நகைகள் அடமானமாகப் பெற்று ஈழத் தமிழ் அகதிகளுக்கு தமிழக அரசு கடன் வழங்கும்

சென்னை, ஜூலை 27
இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தமது நகைகளை அடகு வைத்து 5 ஆயிரம் ரூபா வரை கடனாக பெற்றுக்கொள்ள தமிழ் நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகள் பவுண் நகைகளை குறைந்த விலையில் விற்பதையும், இடைத்தரகர்களிடம் ஏமாறுவதையும் தடை செய்யும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பவுண் ஒன்றுக்கு ஆயிரத்து 200 ரூபா வீதம் 5 ஆயிரம் ரூபாவரை கடன் வழங்கப்படும் என்றும் இதற்கு 16.25 சத வீத வட்டி அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மண்டபம் அகதிகள் முகாமில் நேரடியாக இந்தக் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கடன் நடைமுறை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. [ஒ 9]

## அடுத்த வாரம் மற்றும் ஒரு கப்பல் வந்து சேரலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்மாவட்டத்துக்கு அத்தியாவசியப் பொருள்களுடன் மேலும் ஒரு கப்பல் அடுத்த வாரமளவில் வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இருந்து புறப்பட்ட கப்பல் 200 தொன் அரிசி, 100 தொன் மா 90 தொன் சீனி ஆகியவற்றுடன் இன்று பருத்தித்துறை வந்து சேரும் என்று அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேலும் ஒரு கப்பலை1500 தொன் உணப்பொருள்களுடன் இங்கு அனுப்ப கொழும்பில் நடவடிககை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்தெரிவித்தார்.

இன்று வரும் கப்பல் பொருள்களை இறக்கி விட்டு திருமலை சென்று பிரிமா ஆலையில் இருந்து மாஎடுத்து வரும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## கப்பல் மூலம் எரிபொருள்?

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ். மாவட்டத்துக்கு கப்பல்மூலம் எரிபொருள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்-மாவட்டத்தில் எரிபொருட் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்துள்ளன என்றும் விவசாயம், மீன்பிடித்தொழில்,கைத்தொழில் ஆகியன பாதிக்கப்பட்டுள்ளன என்றும் யாழ்-அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் திரு. தேவநேசன் நேசையாவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

கப்பல் மூலம் எரிபொருள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்- மாவட்டத்துக்கு மாதாந்தம் 9 லட்சம் லீற்றர் பெற்றோலும் 20 லட்சம் லீற்றர் டீசலும், 8 லட்சம் லீற்றர் மண்ணெண்ணெய்யும் தேவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ - 3)

## கோடம்பாக்கம் கொலைச் சம்பவம்: தஞ்சாவூரில் கைதானோர் 15 நாள் விளக்க மறியலில்!

சென்னை, ஜூலை 27
சென்னை கோடம்பாக்கத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத் தலைவர்கள் 15 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட ஐந்து ஈழத் தமிழர்களும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்களை 15 நாள் விளக்க மறியலில் வைக்குமாறு பட்டுக்கோட்டை மாஜிஸ்திரேட் நேற்று உத்தரவிட்டார். அதனையடுத்து அவர்கள் ஐவரும் திருச்சி மத்திய சிறையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சமயம் இவர்கள் ஐவரும் பயணம் செய்து கொண்டிருந்ததாகக் கூறப்படும் வானில் இருந்து இரண்டு வெளிநாட்டுத் தயாரிப்பு கைத்துப்பாக்கிகளும், குண்டுகளும் மீட்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். உ]

### அகதிப் பெண் கடற்கரையில் பிரசவம்!

யாழ்ப்பாணம், ஜூலை 27
திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவுக்கு அகதியாக வள்ளத்தில் வந்த ஓர் இளம் பெண் கடற்கரையிலேயே குழந்தையைப் பிரசவித்தார்.

கடந்தவாரம் செம்மலைக் கடற்கரையில் இச்சம்பவம் இடம்பெற்றது. (ஒ-3)

## உணவுப் பொருள் எடுத்து வர ப. நோ. கூ. சங்கம் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்- மாவட்டத்தில் உள்ள 23 ப.நோ.கூ. சங்கங்களும் கூட்டாக கொழும்பு சென்று உணவுப் பொருள்களை எடுத்து வர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரிசி, சீனி, மா தவிர்ந்த மற்றைய பொருள்களை கொழும்பில் இருந்து நேரடியாக லொறி மூலம் எடுத்து வர உதவும் படி யாழ்- மாவட்ட கூட்டுறவுச் சபை யாழ்- அரச அதிபரைக் கேட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துடன் தொடர்பு கொண்டுள்ளார். இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் வாகன அணியில் கொழும்பு சென்று உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படும். (இ-3)

## யாழ்ப்பாணம் இலங்கை வங்கி இயங்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 27
இலங்கைவங்கியின் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதிக் கிளைகள் நேற்று இயங்கவில்லை. இன்றும் அவை இயங்க மாட்டா.

பாதுாப்பின் நிமித்தமே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதம முகாமையாளர் திருமதி கே. துரைராஜா தெரிவித்தார்.

அதேசமயம் மக்கள் வங்கி வர்த்தக வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, ஆகியன நேற்று ஓரளவு இயங்கின.

## வங்கிகளில்

யாழ்ப்பாணம். ஜூலை 27
இலங்கை வங்கி மக்கள் வங்கி ஆகியவற்றின் காங்கேசன்துறைக் கிளைகள் தவிர்ந்த மற்றைய வங்கிகளில் கொடுக்கல் வாங்கல் முதல் காசோலைப் பரிவர்த்தனை வரை சகல வேலைகளும் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

## உணவுக் கப்பல் முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், ஜூலை 27
வடபகுதிக்கான உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்ட கப்பல் நேற்றுக் காலை 7 மணிக்கு முல்லைத்தீவில் நங்கூரமிட்டது.

ஆயினும் நேற்று நண்பகல் வரை முல்லைத்தீவுக் கரையிலிருந்து தம்முடன் எவரும் தொடர்பு கொள்ளவில்லை என கப்பலிலிருந்து அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து கப்பல் அதேயிடத்தில் தரித்து நிற்பதாகச்சொல்லப்படுகிறது.

முல்லைதீவு கரையிலிருந்து தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் அங்கு பொருள்களை இறக்கிவிட்டு கப்பல் நாளை பருத்தித்துறையை [illegible] யும். (இ-9)

## போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
கடந்த 24 ஆம் திகதி பரந்தன் பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான சிங்கன் வீரமரணமடைந்தார். (ஒ-9)

### மின் விநியோகம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ருக்கக் கூடும் என்று மின்சாரசபை வட்டாரங்கள் சந்தேகம் வெளியிட்டன.

மின் இணைப்புக் கம்பிகள் நிலத்துடன் தொடர்பு பட்டுக் கிடப்பதை சமிக்ஞைகள் மூலம் அறியக் கூடியதாக இருப்பதாகவும் ஓர் அதிகாரி தெரிவித்தார். (உ-9)

### பொலீஸார்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
நேரடியாக வந்து அழைப்பு விடுத்ததை அவர் ஒப்புக் கொண்டார்..

ஒருசாரார் விடுவிக்கும்கைதிகளை முறைப்படி பொறுப்பேற்று, எதிர்த் தரப்பிடம் முறைப்படி கையளிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள எங்கள் செயற்பாட்டில் இடமிருக்கின்றது.

ஆனால் –
வெறும் விடுவிப்பு நிகழ்ச்சியில் பார்வையாளர்களாகப் பங்குபற்ற எங்களுக்கு ஒழுங்குமுறை இல்லை.

– இவ்வாறு அவர் [illegible] விளக்கமளித்தார். (உ-3)

## பெரியபுராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 27
நல்லூர் முருகன் ஆலய உற்சவ கால 25 நாட்களிலும் நல்லை ஆதீனத்தில் பி.ப 3 மணிக்கு பெரியபுராணத் தொடர்சொற்பொழிவுநடைபெற உள்ளது.

வேதாந்த சாகரம் ஆத்ம ஜோதி நா. முத்தையா இந்தத்தொடர்சொற்பொழிவை நிகழ்த்துவார்.

அமைதியும். சுபீட்சவாழ்வும் வேண்டி இப்போது தினமும் பி.ப. 4.30 மணிக்கு ஆதீனத்தில் பஜனைகள்நடைபெறுகின்றன. [ஆ]

## 45 பேர் பலி

பேரூட், ஜூலை 27
லெபனான் தலைநகர் பேரூட்டில் இருந்து 40 மைல் தொலைவில் சித்தோரா நகரில் உள்ள ஹோட்டல் ஒன்று தீப்பற்றி எரிந்ததில் 45 பேர் மாண்டனர்.

## ரொக்கட் தாக்குதல்!

காஷ்மீர் வானொலி நிலையம் மீது தீவிரவாதிகள் நேற்று ரொக்கட் தாக்குதலை நடத்தினர்.

வயல் வெளியில் இருந்து தீவிரவாதிகள் அத்தாக்குதலை நடத்தினர் என்றும் படையினர் எதிர்த் தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## ஹெவி டீசல் திருடர்கள் சுன்னாகத்தில் கைவரிசை!

யாழ்ப்பாணம், ஜூலை 27
சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் ஜெனரேட்டர்களுக்கு என தாங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் ஹெவி டீசலை சிலர் கூட்டமாக வந்து திருடிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

ஒவ்வொன்றும் சுமார் ஐம்பதாயிரம் லீற்றருக்கும் அதிகமான ஹெவி டீசலைக் கொள்ளக்கூடியமூன்று தாங்கிகளில் ஹெவி டீசல் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த டீசலைக் கொண்டு, ஜெனரேட்டர்களை இயக்கி அத்தியாவசிய சேவைகளுக்கும் மற்றும் சுழற்சி முறை விநியோகத்துக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுவருகிறது.

ஆனால் இந்த தாங்கிகள் அமைந்துள்ள பகுதிகளுக்கு இரவில் வரும் திருடர்கள்– காவல்காரர்களை மிரட்டி விட்டு – தாங்கியில் உள்ள சிறிய பைப்பில் குழாய்களைப் பொருத்தி டீசலைத் திருடுவதாகக் கூறப்படுகிறது.

இந்த டீசல் திருட்டைத் தடுப்பதற்காக அப்பகுதியில் காவலை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சாரசபை நடவடிக்கை எடுத்திருப்ப தாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

### பாப்பரசரின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் வாழ்த்துக்களை ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

கத்தோலிக்க சமூகத்தினர் அமைதிக்கும், நல்வாழ்வுக்கும் ஒத்துழைப்பு நல்குவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

நாட்டின் தற்போதைய நிலைபற்றி விவரித்த ஜனாதிபதி அரசாங்கம் கலந்துரையாடல், கருத்தொருமித்தல், இணக்கம் ஆகிய கோட்பாட்டைக் கடைப்பிடித்துப் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

## எரிப்பு

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கொடும்பாவி ஒன்று நேற்று யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் பகுதியில் வைத்து எரிக்கப்பட்டது.

நேற்று மாலை கே. கே. எஸ். வீதி வழியாக பொது மக்களினால் எடுத்து வரப்பட்ட கொடும்பாவியே எரிக்கப்பட்டது. (உ)

## இராணுவ அதிகாரி பலி

நேற்று முன்தினம் மட்டக்களப்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாகவும், 12 இராணுவச்சிப்பாய்கள் காயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (ஒ-9)

## பேச்சு மூலம் தீர்வுகாண ஈ.என்.டி.எல்.எவ். வலியுறுத்து

### ஜனாதிபதியிடம் தெரிவித்தது

கொழும்பு, ஜூலை 27
வடக்கு, கிழக்கில் சமாதானமும், சகஜ நிலையும் ஏற்பட வேண்டுமானால் தற்போதைய பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

–இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறது ஈ. என். டி. எல். எவ். அமைப்பு.

அந்த அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவை தனியாகச் சந்தித்தபோது இதனை வலியுறுத்திக் கூறியதாக அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியைச் சந்தித்த ஈ என். டி. எல். எவ். பிரதிநிதிகள் குழுவில் எம். கே. ராஜா, வி. ராமராஜ், ஐ. யசோதரன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது அப்பாவிப் பொது மக்கள் இறப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்றும்–

வடக்கு, கிழக்கிற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள் விநியோகம் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் ஒழுங்காக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும்படியும்–

–குழுவினர் ஜனாதிபதியை வலியுறுத்தினர். (உ)

### ஐந்து தமிழர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபட்டுவருவதாகவும்20பிரச்சினைகளில் ஒன்று அதிகாரப்பரவலாக்கல்என்றும் ஜனாதிபதி சொன்னார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்த ஐந்து தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் விவரம் வருமாறு:-

1. ரெலோ:என் ஸ்ரீகாந்தா, கே கருணாகரன் எம் பி
2. ஈ பி. ஆர். எல். எப்: ஜனாப் அபுயூசுப், ஜி. சிட்னி டி சில்வா, எஸ். சிவஞானம்.
3. புளொட்: கரவை கந்தசாமி, மாணிக்கதாஸன்.
4. ஈ. பி. டி. பி: டக்ளஸ் தேவானந்தா, சிவதாஸன்.
5. தமிழர் விடுதலைக் கூட்டணி: மாவை சேனாதிராஜாஎம்.பி.

முப்படைகளின் தளபதிகள், பொலீஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர், அமைச்சர்கள் ஏ. ஸி. எஸ் ஹமீது, ரஞ்சன் விஜேரத்தினா, ரணில் விக்கிரமசிங்கா ஆகியோரும் இச்சந்திப்பின் போது சமுகமளித்து இருந்தனர். [ஒ-எ]

### இன்று...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மஞ்சத் திருவிழாவும், 14 ஆம் திகதி கார்த்திகைத் திருவிழாவும், 15 ஆம் திகதி சந்தன கோபாலர் உற்சவமும், 19ஆம் திகதி ரதோற்சவமும் இடம் பெறும். (ஒ-3-10)

### கிழக்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது பின்வரும் கோரிக்கைகளை முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு விடுத்தது.

★ கிழக்கில் சீரான உணவு விநியோகத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

★ இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ சம்மாந்துறை, காத்தான்குடி, ஏறாவூர், கல்முனை ஆகிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும்.

★ கிழக்கிலும்முக்கியமாக காத்தான்குடி-ஒட்டமாவடிப் பகுதியிலும் பாதுகாப்புப் படையினருக்கு மேலதிகமாக ஊர்காவல்படையினரைபாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தவேண்டும்.

★ ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் மட்டக்களப்பு, அம்பாறைமாவட்டங்களுக்கு விஜயம் செய்யக் கூடியதாக பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுடனான மோதல்களின் போது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைக்கு முஸ்லிம் காங்கிரஸ் பாராட்டுத் தெரிவித்தது. [உ-9]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி. 292/2 [illegible] உள்ள அச்சகத்தில் 27-07-1990 இல் [illegible] வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org